# எந்த அணியும் யாழ்வர விரும்பவில்லை
# கோட்டை நிலைகுறித்து சிப்பாயின் கடிதம்

கோட்டை முற்றுகை முயற்சியின்போது பல இராணுவ வீரர்கள் சொல்லப்பட்டதை ஹெலியிலிருந்து பறந்துவந்த இராணுவவீரர் ஒருவரின் கடிதமும் ஊர்ஜிதம் செய்கிறது. சில தினங்களுக்கு முன்னர் மண்டைதீவிலிருந்து பலாலியை நோக்கிச் சென்று கொண்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்றிலிருந்து சில கடிதங்கள் கீழே தவறுதலாக வீழ்ந்தன. இக்கடிதங்கள் மண்டைதீவிலுள்ள இராணுவத்தினரால் அவர்களது உறவினர்களுக்கு எழுதப்பட்டவையாகும். லான்ஸ்கோப்ரல்அபயகோன் என்ற இராணுவ வீரர் ஒருவரால் அவரது பெரிய அண்ணருக்கு எழுதப்பட்ட கடிதத்திலேயே மேலே உள்ள விபரம் சொல்லப்பட்டிருக்கிறது. 'பெரிய அண்ணா நீ குடிப்பதை இன்றுடன் நிறுத்திக்கொள். கோட்டையைப்பிடிக்கும் முயற்சியில் எங்கள் சகாக்களில் பலர் இறந்து விட்டனர், எங்கள் வேலையும் அப்படித்தான். நாங்கள் புலிகளுடன் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு | விலை ரூபா:- 3-50

முரசொலி

முரசு 04 ஒலி 221 சனி 22-09-1990 (புரட்டாதி 06) ற.அவ்வல் 02

★ ஸ்ரீலங்கா அரச படைகள்

# கிழக்கு மாகாணத்தில் இருந்து
# தமிழரை விரட்ட நடவடிக்கை

**கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா இராணுவம் தமிழ் மக்களை அழித்தும் விரட்டியடித்தும் தொடர்ச்சியாக அங்குள்ள ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் தமிழ் மக்களை விரட்டியடித்து வருகிறது.**

இவ்வாறு மட்டக்களப்பு-அம்பாறை பிராந்திய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள சகல தமிழர்களையும் வெளியேறிவிட வேண்டும் என்று படையினர் எசசரித்துள்ளனர். அங்கே சகல நிர்வாகமும் சிங்களமயமாக்கபபட்டு வருகின்றன.

அம்பாறையில் இதுவரை 1714 தமிழர்கள் சிங்கள படையினாலும் முஸ்லிம் — 04 ஆம் பக்கம் பார்க்க

## கர்ப்பிணித் தாய்மார்களின் விபரங்கள் சேகரிப்பு

கர்ப்பிணித்தாய்மார், பாலூட்டும் தாய்மார், பாடசாலை முன்நிலைப் பிள்ளைகள், 5 வயதிற்குட்பட்ட குழந்தைகள் பற்றிய விபரங்களை யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து அகதி முகாம் பொறுப்பாளர்களும் மானிப்பாயில் இயங்கும்செஞ்சிலுவைச் சங்கப் பிரிவுடன் இன்று உடனடியாகத் தொடர்பு கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ள — 04 ஆம் பக்கம் பார்க்க

## கிராமிய வைத்தியசாலை மீது செஸ்னா - 337 தாக்குதல்

கடந்தசெவ்வாய்பகல்இரண்டுமணியளவில் வடமராட்சி கிழக்கிலுள்ள மருதன்கேணி கிராமிய வைத்தியசாலை மீது அரைமணித்தியாலம் வரை சீப்பிளேன் (செஸ்னா - 337) ஒன்று சரமாரியாக துப்பாக்கி வேட்டுகளைத்தீர்த்தது.

இதனால் வைத்தியசாலை வாட்டில் தங்கியிருந்த அனைத்து நோயாளரும் அன்று மாலையே கால்நடையாகவே தத்தமது வீடுகளுக்குச் சென்றனர். 43-18து

## கப்பல் மூலம் வந்த மாவில் கூட்டுறவு ஊழியர்கள் மோசடி

கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு வந்த மாவில் மோசடி செய்ததாக கூட்டுறவுச் சங்க ஊழியர்கள் நால்வரை விடுதலைப்புலிகள் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

இந்த நால்வரும் பருத்தித்துறையில் இருந்து லொறி மூலம் வடமராட்சி கிழக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 150 மூடைகள் மாவை ஏற்றிச்சென்றபோது — 04 ஆம் பக்கம் பாாக்க

## வவுனியாவில் தொடரும் புலிகள்-ராணுவம் மோதல்கள்

நேற்று முன்தினம் வவுனியா காமினி மகாவித்தியாலயத்திலிருந்தும் குருமண்காடு முகாமில் இருந்தும் ராணுவம் முன்னேற முயற்சிகளை மேற்கொண்டது.

காமினி மகாவித்தியாலய ராணுவத்தினர் மக்களைக் கேடயமாகக் கொண்டு முன்னேற முற்படுகையில் விடுதலைப் புலிகள் தாக்குதலை நடாத்தினர். தாண்டிக்குளம் பகுதியில் நடைபெற்ற — 04 ஆம் பக்கம் பார்க்க

## பெண்புலிகள் குறித்து லண்டன் தினசரி கருத்து

விடுதலைப்புலிகள் அமைப்பில் மூவாயிரம் பெண்புலிகளும் இணைந்து தற்போது போராடுவதாக லண்டனில் இருந்து வெளியாகும் 'இன்டிபென்டன்ட்' என்ற தினசரி குறிப்பிட்டுள்ளது.

இத்தினசரிக்கு எழுதப்பட்ட ஓர் கட்டுரையில் பெண்களின் குடுபபப்பாங்கை வலியுறுத்தும் சமுதாயத்தில் இப்படிப்பெருந்தொகையில்பெண்கள்போராடப் புறப்பட்டமை — 04 ஆம் பக்கம் பார்க்க

## அம்பாறையில் அதிரடிப்படை மீது தாக்குதல்; சிப்பாய் பலி 4 பேர் காயம்

கடந்த வியாழனன்று அம்பாறை மாவட்டத்தில் உள்ள தோணிக்கல் பகுதியில்விசேட அதிரடிப்படையினர்மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இத்தாக்குதலின் போது அதிரடிப்படையினர் தரப்பில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டார். நான்கு சிப்பாய்கள் படுகாயமடைந்தனர்.

இதே தினம் கல்முனையில் 2-ஆம் குறிச்சியைச் சேர்ந்த சாமி என்ற பொதுமகன் முஸ்லிம் ஊர்காவற்படையினரால் கொல்லப்பட்டார். (து

## திலீபன் நினைவு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், நல்லூர், அரியாலை, நாயன்மார்கட்டு பகுதி வீதிகளில் தியாகி திலீபனின் நினைவு தினத்தையொட்டி அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ் மாநகரப் பகுதியில் மக்கள் இடம்பெயர்ந்துள்ள போதிலும் வீதிகள் அலங்கரிக்கப்பட்டுள்ளன.

கோண்டாவில், அச்சுவேலி ஆகிய பகுதிகளில் அடையாள ...04 ஆம் பக்கம் பார்க்க

## அகதி முகாம்களில் இருப்போர் நிவாரணம் பெற அறிவுறுத்தல்

இடம் பெயர்ந்து அங்கீகரிக்கப்பட்ட முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு போதியளவு உணவு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் முகாம்களில் தங்கியுள்ளவர்கள் வேறு இடங்களில் இவற்றைப் பெறுவதற்கு பெர்மிட் பெற்றுக் கொள்ளக்கூடாது என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி புனர்வாழ் — 04 ஆம் பக்கம் பார்க்க

## வவுனியாவில் ராணுவம் குவிப்பு

வவுனியாவில் ஸ்ரீலங்கா இராணுவம் மேலும் குவிக்கப்பட்டுள்ளதாக அறியவந்துள்ளது.

ஒரு பகுதி இராணுவம் வெளியேறிய போதிலும் புதிதாக 500 சிப்பாய்கள் கொண்ட புதிய அணியொன்று வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வவுனியா — 04 ஆம் பக்கப் பார்க்க

## நேற்று மாலையும் நகரில் வை-12 விமான நேபாம் குண்டு

நேற்று மாலை வை-12 ரக ராட்சத விமானமும் அவ்ரோ விமானங்களும் கோட்டைப் பகுதியைச் சூழவுள்ள பகுதிகளிலும் நகரின் சத்திரச்சந்திப் பகுதிகளிலும் குண்டு வீச்சு நிகழ்த்தின.

வை-12 ரக விமானம் வீசிய குண்டுகள் வீழ்ந்து வெடித்த இடங்களில் பெரும் புகை மண்டலத்துடன் தீச்சுவாலைகளும் எழுந்தன. 73-து

## இடம்பெயர்ந்தோருக்கு முதலிடம்

யாழ். மாவட்ட மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு, இலவச பங்கீட்டு உணவுப் பொருள் விநியோகத்தில் சில ஒழுங்கு முறைகளைக் கடைப்பிடிக்க யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி கூட்டுறவுச் சங்க கிளை நிலையங்களில் முதற் — 04 ஆம் பக்கம் பார்க்க

## மாதகல் கடலில் மீனவரை கடற்படை தாக்கியது

நேற்றுக் காலை 8-30 மணியளவில் ஸ்ரீலங்கா அரசின் கடற்படைப் படகுகள் மாதகல் கடற்கரைப்பகுதியில் மேற்கொண்ட தாக்குதலில் பல மாதங்களின்பின் சிறு படகுகள், வள்ளங்கள் மூலம் மீன்பிடித் தொழிலுக்குச் சென்ற இருபத்தைந்துக்கு மேற்பட்ட மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

## மண்ணெண்ணையில் தண்ணீர் வியாபாரிக்கு எச்சரிக்கை

மண்எண்ணையில் தண்ணீர்கலந்து விற்பனை செய்த மண் எண்ணை வியாபாரி ஒருவர் விடுதலைப்புலிகளினால் எச்சரிக்கை செய்யப்பட்ட சம்பவம் பண்டத்தரிப்புச் சந்தையில் நிகழ்ந்துள்ளது, இந்த மண்எண்ணை வியாபாரி மேற்படி சந்தையில் நேற்றுமுன்தினம் ஒரு போத்தல் மண்எண்ணையை 38 ரூபா என்று கூறி விற்றார், சில விவசாயிகள் இவரிடம் -04 ஆம்பக்கம்பார்க்க

இந்நாள் இம்மாதம் 1987 ஆம் ஆண்டு — முரசொலி தந்த சிறப்புச் செய்திகள்

# மகனே! என்றழைக்க தாய்க்குலம் காத்திருந்தது

திலீபனை நேற்று அவதானித்த டாக்டர்களின் அனுமானத்தின்படி அவரது எடை பதினைந்து இறாத்தலால் குறைந்திருந்தது. இரத்தோட்டமின்றி கை, கால், கண் மடல் ஆகியன வெளிறிக்காணப்பட்டன. ரத்தத்தில் யூரியாவின் அளவு அதிகரித்திருக்கலாம். கண் பார்வைச் சக்தி வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. கேட்கும் சக்தி, கிரகிக்கும் சக்தி ஆகியனவும் குறைந்திருந்தன.

திலீபனுக்கு அன்னை இல்லை. ஆனால் திலீபனைப் பார்த்து, மகனே! என்று அழைக்கத் தாய்க்குலம் காத்திருந்தது.

பல இராணுவ நடவடிக்கைகளில் நேரடியான பங்குகொண்ட திலீபன் நான்கு தடவைகள் வீரத் தழும்புகளைப் பெற்றுள்ளார்.

நவாலியில் பொலிஸாருடன் ஏற்பட்ட மோதல், கோட்டை இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதல், வல்லை வெளியில் இராணுவ அதிரடிப்படையினருடன் ஏற்பட்ட மோதல், காரைநகரில் கடற்படையினருடன் ஏற்பட்ட மோதல் என்பனவே இவ் வீரத் தழும்புகள் ஏற்படக் காரணமாகின.

''இனிய வீரனே!

நாங்கள் உனக்கு சத்தியம் செய்து கொடுக்கிறோம், உன்னுடைய தலைவன் பிரபாகரன் தலைமையில் என்றைக்கும் நாங்கள் உறுதியாக நிற்போம்!

சுதந்திரத்திற்குப் பசளைபோடுவது எப்படி என்று நீ கற்றுத் தந்திருக்கிறாய்,

உன் கனவுகளுக்கு நாங்கள் நீர்வார்ப்போம்'' கவிஞர் காசிஆனந்தன் கவிதையிலிருந்து சில வரிகளே இவை. (கி—ஸ்ரீ)

## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பன்குளம் திருகோணமலையிலிருந்து அகதியாக வந்த K. இராஜேஸ்வரன் என்பவரின் பென்ரனுடன் சங்கிலி, பெட்டி மோதிரம் S மோதிரம், அப்பலோ மோதிரம், சிறிய மோதிரம் என்பன 20/9/90 மாலை 5மணியளவில் யாழ், வளாகத்திற்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்வெள்ளை நிற லேஞ்சியால் சுற்றப்பட்ட நிலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் தயவுசெய்து 180/2,சேர் பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம், என்ற முகவரியில் ஒப்படைக்கவும். 09069

### புத்தகம்

இயற்கைதரும் இன் மருந்துகள், சிறந்த மருத்துவ நூல், வீட்டில் இருந்தபடியே வைத்தியம் கற்றுக்கொள்ளலாம். விலை ரூ. 52/50. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09045

### சேவை

போட்டோஸ்ரட் பிரதிகளை பெற்றிடவும், அடையாள அட்டைகள், ஆவணங்கள் பிளாஸ்ரிக் கவரிடவும் கிளீன்கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். வேலை நேரம் 10 மணிக்கும், 3 மணிக்கும் இடையில். 09065

### தேவை

வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. மில்க் வைற் - யாழ்ப்பாணம். 09068

### தவறிவிட்டது

குருசாமி ஜெயராணி, துரையப்பா வீதி, தெல்லிப்பழை, எனும் பெயர் விலாசமுள்ள அடையாள அட்டையும் உணவுமுத்திரையும் 19.9.90.அன்று தெல்லிப்பழைக்கும்கொக்குவிலுக்குமிடையில் தவறிவிட்டது.கண்டெடுத்தவர் தயவு செய்து முரசொலி காரியாலயத்தில் கொடுக்கவும். 09067

## செஞ்சிலுவை வாகனம் மோதி சகோதரர் காயம்

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயச்சந்தியில் சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத்தின் வாகனம் மோதியதினால் சைக்கிளில் வந்த இருவர் காயமடைந்தனர்.

செல்வி ஜெ.வல்லிபுரம்(22) அவரது சகோதரர் க. சண்முகதாசன் (45) ஆகியோரே காயமடைந்தவர்களாவர். இவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (ப-11கி)

## எம். ஜி. ஆர் சிலையை ராஜீவ் திறந்துவைப்பார்

மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனுக்கு சென்னை அண்ணாசாலையில் மிகப் பெரிய உருவக் சிலையொன்று அமைக்கப்பட்டுள்ளது.

முன்னாள் பிரதமரும், இந்திரா காங்கிரஸ் தலைவருமான ராஜீவ்காந்தி எதிர்வரும் ஏழாம் திகதி இச் சிலையை திறந்து வைக்கவுள்ளார். (கி)

## தபால்கள் சேகரிக்கப்படும்

யாழ்ப்பாணம் பிரதம தபாலக நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மக்களும் ஏனையவர்களும் தமக்குரிய வெளியூர்த் தபால்களை யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் பிரதம தபாலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் தபாற் பெட்டியிலும் நீராவியடி உபதபால் அலுவலகத்தில் உள்ள தபாற் பெட்டியிலும் போடலாமென்று யாழ், பிரதம தபாலதிபர் சு. பரராஜசிங்கம் தெரிவித்தார்.

பெட்டியில் போடப்படும் கடிதங்கள் சேகரிக்கப்பட்டு வாராவாரம் கப்பலில் அனுப்பப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (33 கி)

★ சம்பளத்தில் 50 வீதம் கிடைக்கும்

# வடக்குக் கிழக்கு அரச ஊழியர்க்கு 3 மாத கஷ்டப்படி வழங்க முடிவு

வடக்குக் கிழக்குப் பகுதியில் கடமை புரியும் சகல அரசாங்க ஊழியர்களுக்கும் கஷ்டப்படியொன்றை வழங்க அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

யூன் 11-ம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு இந்த விசேட கஷ்டப்படி வழங்கப்படும்.

இப்பகுதிகளைச் சேர்ந்த சகல அரசாங்க ஊழியர்களுக்கும் அவர்களது சம்பளத்தின் ஐம்பது வீதம் கஷ்டப்படியாக வழங்கப்படும்.

அல்லது ஆகக் கூடுதலாக 500 ரூபா கஷ்டப்படியாக வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

## ஆஸ்பத்திரியில் துர்நாற்றம்

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலையில் மலசல கூடங்கள் துப்புரவு செய்யப்படாமல் காணப்படுகிறது.

இதனால் நோயாளிகள் மலசல கூடத்திற்கு செல்ல முடியாது பெரும் அசௌகரியத்திற்குட்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

தண்ணீர் இன்மை,இடவசதியின்மை, நோயாளர்களின் அதிகரிப்பு, ஊழியர்களின் வரவின்மையே இதற்குக் காரணமென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (71ரு)

## இறுதிக்கிரியை நடைபெற்றது

வேலணைக் கோட்டக் கல்வி அலுவலக நிர்வாகத்துக்குப் பொறுப்பான அதிகாரி க. சண்முகநாதனின் இறுதிக்கிரியை கடந்த 19-ம் திகதி கந்தர்மடத்தில் நடைபெற்றது.

இறுதிக்கிரியையில் கல்வித் திணைக்கள ஊழியர்களும், ஆசிரியர்களும் பெருமளவில் கலந்து கொண்டனர்.

திரு சண்முகநாதன் 'குருதி நஞ்சூட்டு' (Septicaemia) நோயினால் மானிப்பாய் வைத்தியசாலையில் மரணமாகியிருந்தார். (கி)

## பார்ஸல் காத்திருக்கிறது

மானிப்பாய் போதனா வைத்தியசாலையில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத்திடம் என். செல்வராஜா நீதிமன்ற வீதி, மல்லாகம் என்பவருக்கு மருந்துப் பொருட்கள் அடங்கிய பொதி ஒன்று உள்ளது.

இதனை தகுந்த அத்தாட்சியைக்காட்டி பெற்றுக்கொள்ளும்படிசெஞ்சிலுவைச்சங்க அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (68-ரு)

## சனிபகவான் துதி

நீரினை உண்டு எழுமேக வண்ணா போற்றி
நெடுந்தடத்தில் உறுகமலக் கண்ணா போற்றி
சூரியன்தன் தவத்தில்வரு பாலா போற்றி
தூயநவக் கிரகத்துள் மேலா போற்றி
காரியெனும் பேர்கொள்உப காரா போற்றி
காசியினில் கீர்த்திபெற்ற தீரா போற்றி
மூரிகொள்ளும் நோய்முகவா முடவா போற்றி
முதுமணிகள் முண்டகத்தாள் போற்றி போற்றி.

(இன்று புரட்டாதிச் சனியாகும். அதனையொட்டி இச் சிறப்புக் கவிதை பிரசுரமாகிறது.)

## வெளிமாவட்ட ஆசிரியர்க்கு வரவு சான்றிதழ் வழங்கப்படும்

வடக்குக் கிழக்கு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து விடுமுறையில் யாழ்ப்பாணம் வந்து திரும்பிச் செல்லமுடியாத நிலையில் உள்ள ஆசிரியர்களிற்கு ''வரவுச் சான்றிதழ்'' வழங்குவதற்கான ஏற்பாடுகளை யாழ். கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாகக் கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்ட நாளிலிருந்து யாழ். கல்வித் திணைக்களத்தில் வைக்கப்பட்டுள்ள தனியான பதிவேட்டில் கைச்சாத்திடுமாறு இவர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

இம்மாவட்டத்தைச்சேர்ந்த ஆசிரியர்கள் வரவுச்சான்றிதழ் வழங்குவதற்கு இது வசதியாக இருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (70கி)

## மீண்டும் மாட்டுழவு

ஆனைக்கோட்டை, நவாலிப்பகுதியில் வயல்காணியை உழுது மறுப்பதற்கு ஒரு பரப்புக்கு உழவு இயந்திரக் கட்டணமாக தற்பொழுது 75 ரூபா அறவிடப்படுகின்றது. ஆனால் மாட்டுழவுக்கு பரப்புக்கு 25 ரூபா மட்டுமே அறவிடப்படுகின்றது.

இதனால் இப்பகுதியிலுள்ள விவசாயிகள் மாட்டுழவையே தற்பொழுது நாடிவருகின்றனர். (ப-11கி)

தொடர் காவியம்

அங்கம்: 8

## தியாகத் திலீபம்

— மு. வே. யோ. வாஞ்சிநாதன்

தமிழ் இனத்துக்காக உண்ணாவிரதம் இருந்து தன் இன்னுயிர் தந்த மாபெரும் தியாகி அமரர் திலீபன் அவர்கள்.அன்னாரது உண்ணா நோன்பின் எட்டாம் புனித நாளின் நினைவு இந்நாள்.

தியாகச் சுடராம் திலீபன் நினைவைப் போற்றி அன்னாருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக இத்தொடர் காவியத்தை வெளியிடுகிறோம்.

நல்லூரில் மக்கள் கடல் போல் நிறைந்திட
வல்லூறாய்க் 'ஹெலிகள்' வானில் பறந்திட
எல்லோரின் மனமும் துயரில் அமிழ்ந்திட
எளிமையாய்ப் பயணம் தொடங்கினான் திலீபன்!

நல்லவழி 'அகிம்சை' என்றோதும் நாட்டவனை
வெல்லவழி தேடி தியாகப்போர் மூட்டியவன்
மல்லிகையின் இதழ்கள் மழையைக் காணாமல்
மெல்ல உதிர்வதுபோல் உணர்விழந்து வந்தான்!

சொட்டுநீர் கூடச் சுவைக்காது நாள்முழுதும்
பட்டினியால் பிள்ளை பசுந்தளிராய் வாடியது;
கட்டி லருகினிலே கல்லாக நாமிருக்க
மொட்ட விழ்ந்த மலரொன்று முகையிலே விழுகிறது!

தாகத்தால் உயிரொன்று தவிப்பதைக் கண்டு
சோகப் புயலங்கே சுற்றிவர வீசியது!
தேகம் தளர்ந்தாலும் தெளிவான சிந்தையது
வேகமுடன் நின்று விழிப்பாக ஆடியது!

(வளரும்)

## முக்கிய அறிவித்தல்

எங்கள் கடிதத்தொடர்பின்றி கொடுக்கப்படும் சகல கொடுப்பனவுகளும் எங்களால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை சகல வியாபாரிகளுக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்
09070

முரசொலி

எமது சிந்தனை

1990 - 09 - 22 சனி

''ஒரு தொழிலை நடத்துவது போல ஓர் அரசாங்கத்தை நிர்வகிக்க முடியாது. அரசாங்கத்துக்கு மனிதத்தன்மை வேண்டும். அதற்கு ஓர் இதயம் இருக்கவேண்டும்''.

— ஹேர்பட் லேமன்

## நஷ்டம் யாருக்கு?

போர் மூண்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக நடத்தப்பட்டுவரும் வான் தாக்குதலால் ஏற்படும் உயிரிழப்புக்கள் பற்றி, அண்மையில், இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தோம். தமிழ் மக்களுடைய உடைமைகளுக்கும் பாரிய நஷ்டம் ஏற்படுவதை ஆழ்ந்த கவலையோடு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தனிப்பட்டவர்களுடைய வீடு, வாகனங்கள், தொழில் ஸ்தாபனங்களுக்கு உண்டாகும் அழிவை - அவை எவ்வளவு பாரதூரமான போதும் - நாம் இங்கு ஆராயவில்லை. சிவில் நிர்வாக யந்திரம் மீள இயங்கும் போது நடத்த வேண்டிய கணக்கெடுப்புக்குள் அது வரும்.

குண்டு வீச்சுத் தாக்குதலுக்குப் பொதுச் சொத்துக்கூட தப்பவில்லை என்பது வேதனை தரும் விஷயம்.

சுன்னாகம் மின் நிலையம் நெருக்கடி மிக்க காலகட்டங்களிலும் சிறப்பாகப் பணியாற்றி வந்தது. நாடு நீர் மின்சாரத்துக்கு மாறியதும், ஏனைய நிலையங்கள் டீசலில் இயங்கும் தமது ஜெனறேற்றர்களைக் கழித்துவிட, சுன்னாகம் மட்டும் - தீர்க்கதரிசனத்தோடு - ஹெவி டீசலில் இயங்கும் ஜெனறேற்றர்களைப் பேணிவந்தது.

இதனால் அல்லவா, குண்டு வீச்சினால் கிளிநொச்சியில் உயர்சக்தி கொண்ட கேபிள்கள் அறுந்து குடாநாடு இருளில் மூழ்கிய போதும், அது சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கி மக்களுக்குப் பேருதவி புரிந்தது.

அந்த மின் நிலையமும் - ஒரு முறையல்ல - மும்முறை தாக்கப்பட்டுச் செயலிழந்து கிடக்கிறது.

போர் தொடங்கிய காலத்திலிருந்து மக்கள் சொல்லொணாத் துன்பம் அனுபவித்து வருகிறார்கள். ப. நோ. கூட்டுறவுச் சங்கங்கள் மட்டும் சேவையுணர்வுடன் செயற்படாதிருந்திருந்தால், பட்டினியால் இறந்தோர் எண்ணிக்கை பல்லாயிரமாய் இருந்திருக்கும்.

ஊரடங்கு வேளைகளில்கூட தம் உயிரையும் பொருட்படுத்தாது கூட்டுறவுத் துறையினர் ஆற்றிய பணி போற்றற்குரியது.

ஆனால் அரச படைகளுக்கு இவையெல்லாம் தெரிவதில்லை. அவர்கள் கண்களுக்கு 'இருண்டதெல்லாம் பேய்!' இல்லாவிட்டால், கடந்த மாதம் ஊர்காவற்துறையில் இறங்கிய படைவீரர்கள், வேலணைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பல கோடி பெறுமதியான கட்டிடங்களையும், களஞ்சியங்களையும் வாகனங்களையும் அழித்திருப்பார்களா?

இதற்கெல்லாம் காரணம் என்ன?

அரசின் மட்டத்திலும், ஆயுதப்படைகளின் மட்டத்திலும், ''அழிபவை தமிழர் உடைமைகள்' என்ற மனப்பாங்கு இருப்பது போலத் தெரிகிறது.

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஏற்படும் அழிவால் முழு நாடே நஷ்டமடைகிறது என்ற ஞானம் எப்போதாவது அரசுக்கு வராதா?

★ அமைச்சர் ரஞ்சன் அறிவிப்பு:

# கிழக்கு மாகாணத்தில் மீண்டும் சிங்களவர் குடியேற்றப்படுவர்

கிழக்கு மாகாணத்தில் இருந்து வெளியேறிய சிங்களவர்கள் மீண்டும் அவர்களது முன்னைய பகுதிகளில் குடியேற்றப்படுவர் என பாதுகாப்பு, பெருந்தோட்டத் துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா அறிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் நடந்த வாராந்த பத்திரிகையாளர் கூட்டத்திலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இதேவேளை கிழக்கில் தற்பொழுது அகதி முகாம்களில் உள்ள சிங்களவர்களுக்கு பல விசேட கொடுப்பனவுகள் வழங்க நடவடிக்கையெடுக்கப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

மீண்டும் தமது இருப்பிடங்களுக்கு திரும்பும் சிங்களவர்களுக்கு விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படுவதுடன், குறிப்பிட்ட காலம்வரை இலவசமாக பங்கீட்டு உணவுப் பொருட்களும் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (கி)

கடந்த ஒரு மாதத்தில் மட்டும்

## வவுனியாவில் 28 தமிழ் இளைஞர் கைதாகி காணாமல் போயினர்

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஆகஸ்ட் மாதப் பகுதியில் 28 தமிழ் இளைஞர்கள் இலங்கை இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போய் உள்ளனர்.

இத்தகவலை வவுனியா பிரஜைகள் குழுவினர் தெரிவித்தனர்.

இந்த 28 இளைஞர்களது நிலைபற்றி தமக்கு எதுவுமே தெரியாது என இராணுவ அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு இவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளார்கள் என இப்போது தெரியவருகின்றது. (11கி)

## முதலுதவி நிலையத்தினர் வைத்தியசாலைக்கு இரத்ததானம்

மானிப்பாயில் இயங்கும் யாழ். போதனா வைத்தியசாலைக்கு அளவெட்டி வடக்கு முதலுதவி நிலைய உறுப்பினர்கள் 25 பேர் இரத்ததானம் செய்துள்ளனர்.

அத்துடன் இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சமிக்கை ஒளி காட்டுவதற்கு பெருமளவு ரயர்கள், சிரட்டைகள் என்பவற்றையும் சேகரித்து வழங்கியுள்ளனர். (கி)

## சாயி சமித்தியில் திருட்டு

வவுனியா புகையிரதநிலைய வீதியில் உள்ள சாயி சமித்தி மண்டபம் உடைக்கப்பட்டு பல பெறுமதிமிக்க பொருட்கள் அபகரிக்கப்பட்டுள்ளதாக அங்கு சென்று வந்த சாயிபக்தர் ஒருவர் கவலையுடன் கூறினார்.

மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த பெரிய அளவிலான சாயி நிழல் படமும் காணாமல் போய் உள்ளது. மேற்படி மண்டபத்தில் கடந்த மூன்று மாத காலமாக எந்தவிதமான சமய வைபவங்களும் இடம் பெறவில்லை. இப்பகுதி இராணுவ சூழலாக இருந்தது குறிப்பிடத்தக்கது. (11 கி)

## பூந்தோட்ட வீதி திறக்கப்பட்டது

கடந்த மூன்றுமாத காலமாக மூடப்பட்டிருந்த குடியிருப்பு ஊரான வவுனியா — பூந்தோட்ட வீதி திறக்கப்பட்டுள்ளதாக இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

வடக்கே இருந்து வரும் வாகனங்கள் இப் பாதை ஊடாக வவுனியாநகருக்கு வரமுடியும்.

வாகனங்களும் பொருள்களை ஏற்றி குறிப்பிட்ட வீதியால் போய்வர முடியும். எதுவித தடையுமில்லை.

மழையின் காரணமாக வவுனியா குளஅணை ஊடாக வாகனங்கள் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (11 கி)

## கண்டெடுத்தால் ஒப்படைக்குமாறு கருணைக் கோரிக்கை

திருகோணமலை— பன்குளத்திலிருந்து அகதியாக வந்த கே. ராஜேஸ்வரன் என்பவரது பென்ரனுடன் கூடிய சங்கிலி மற்றும் நான்கு மோதிரங்கள் நேற்று முன்தினம் மாலை வெள்ளைநிற கைக்குட்டையால் சுற்றப்பட்ட நிலையில் யாழ். வளாகத்திற்கும், கொக்குவல் சந்திக்கும் இடையில் தவறவிடப்பட்டுவிட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது

கண்டெடுத்தோர் 180/2, சேர். பொன் இராமநாதன் வீதி, திருநெல்வேலி என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு கருணையுடன் கோரப்படுகின்றனர். (ஸ்ரீ)

## வியப்பளிக்கும் விலையுயர்வு

சாவகச்சேரிப் பகுதியில் இப்போது தேங்காய் பத்து ரூபாவுக்குமேல் விற்பனையாகிறது.

இதில் வியப்பென்னவென்றால் முன்னர் இப்பகுதியில்தான் தேங்காய் மலிவு விலையில் கிடைத்து வந்தது. இப்போது கோப்பாய்க்கு அப்பால் தேங்காய் விலை அத்தனை உயர்வு என்று சொல்வதற்கில்லை. (ஸ்ரீ)

## அலுவலகம் இடமாற்றம்

வடக்கு- கிழக்கு மாகாணப் பிரதி பொலிஸ் மாஅதிபரின் செயலகம் வவுனியாவில் செயற்படுகின்றது.

திருகோணமலையில் இச்செயலகம் முன்னர் இயங்கி வந்தது.

வவுனியா- கண்டி வீதியில் குறிப்பிட்ட செயலகம் இயங்குகின்றது.

வடகிழக்கு மாகாணப் பிரதிப் பொலிஸ் மா அதிபராக டி. ஆனந்தராஜா கடமையாற்றி வருகிறார்.

வவுனியா மாவட்டப் பொலிஸ் அத்தியட்சகராக எஸ். நவரட்ணராஜா தொடர்ந்தும் பதவி வகித்துவருகின்றார், (11கி)

## உணவு உற்பத்தி கைநூல்

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் விவசாயக் குழுவினர் இன்றைய சூழ்நிலையில் எமது பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய உணவு உற்பத்தி முயற்சிகள் பற்றிய அடிப்படைகளை மையமாகக் கொண்ட ''இன்றைய சூழ்நிலையில் எமது பிரதேசங்களில் உணவு உற்பத்தி', என்ற விவசாயக் கைநூல் ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இக்கைநூலில் இன்றைய சூழலில் பயிரிடப்படக்கூடிய பயிர்வகைகள் பற்றியும், இப் பயிர் வகைகளை எமது பகுதிகளில் உள்ள சக்திகள், மூலப்பொருட்கள் என்பனவற்றைப்பயன்படுத்தி எவ்வாறு தடையின்றிப் பயிரிடலாம் எனவும் விளக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

(நேற்றைய தொடர்)

## என் கவிதை எரிகின்றது

வேகமான
வார்த்தைகளை
நான்
விதைத்துக் கொண்டிருந்தபோது
கன்னித் தமிழ்ப் பெண்கள்
அங்கே
கற்பிழந்தார்கள்.

●

வெள்ளைத் தாள்களைத்
தொட்டுத் தொட்டு
என் எழுதுகோல்
பொட்டு வைத்துக்
கொண்டிருந்தபோது
எம் குலப் பெண்கள்
வெள்ளைத் தாய்களாய்
விதவைகளானார்கள்—

●

அவர்களுடைய
குழந்தைகளை
நெருப்பு
குளிப்பாட்டி விட்டது!

●

என்பேனா
துப்பாக்கியாக மாறியிருந்தால்—
தாள்களை இப்போது
தடவிக் கொண்டிருக்காது!

●

வார்த்தைகள்
அர்த்தங்களை இழந்தன
சொற்கள்
இப்போது
சும்மா கிடக்கின்றன.

●

அங்கே நெருப்பு
அணைந்து போனபின்
நெஞ்சில் நெருப்பு
நீளுகின்றது.

●

என் கவிதை இப்போது
எரிந்து கொண்டிருக்கிறது......
எரிப்பதற்காக!

- மேத்தா

# இலவச நிவாரணப் பங்கீட்டில் சில கூட்டுறவுகடைகள் மோசடி

தற்போது கூட்டுறவு மற்றும் உத்தரவு பெற்ற வியாபாரிகளின் கடைகள் மூலம் வழங்கப்படும் நிவாரணப் பொருட்களில் நிறுவைகளில் மோசடிகள் இடம் பெறுவதாக பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

சில கூட்டுறவுச் சங்க கிளைகளில் அவற்றின் கிளைக் குழுவினர் இருந்தும் இந்த மோசடிகள் நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. நிறுவைகளில் 50 கிராம், 25 கிராம் குறைவாகவே இப் பொருட்கள் நிறுக்கப்படுகின்றன.

இதேவேளை நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள உத்தரவு பெற்ற வியாபாரி ஒருவர் லக்ஸ்பிறே, மா, அரிசி ஆகியவற்றை கட்டுப்பாட்டு விலையிலும் அதிசமாக விற்றுள்ளதாகவும் இருபாலை கிராம சேவையாளர் பிரிவு மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

400 கிராம் லக்ஸ்பிறே 40 ரூபா40சதமாகவிற்கும்போது இக்கடையில்45ரூபாவாக விற்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இதே நேரம் சில கூட்டுறவுக் கடைகளின் முன்பாக இரவு நேரம் பொதுமக்கள் படுத்திருந்து அதிகாலை நம்பர் துண்டு எடுத்து கொதிக்கும் வெய்யிலில் கால் கடுக்க கியூவில் நிற்பதையும் காண முடிகிறது. (33 ப 10 ரூ)

## நேற்றுக்காலை நுகேகொடையில்

# பாராளுமன்றஉறுப்பினர் அவமதிப்பு சபையில் உரிமைப்பிரச்சினை

எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அவமதிக்கப்பட்டதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுக்காலை கொழும்பு சிராவஸ்தியில் இருந்து கோட்டை பாராளுமன்றத்திற்கு விசேட பஸ் வண்டியொன்றில் பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அச்சமயம் நுகேகொடையில் சிலர் இந்த பஸ் வண்டியை இடைமறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்களை அவமதித்தனராம்.

இச்சம்பவம் குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நேற்றுக்காலை பாராளுமன்றத்தில் சிறப்புரிமைப் பிரச்சினையைக் கிளப்பினர். (கி)

# இடம்பெயர்ந்த ஆசிரியர்களுக்கு இனி முற்பணம் வழங்கப்படாது

அண்மைய நிகழ்வுகாரணமாக வடகிழக்கு மாகாணங்களிலிருந்து இடம் பெயர்ந்து யாழ்ப்பாணத்துக்கு வந்துளள கல்வித்திணைக்கள ஊழியர்கள், ஆசிரியர்களுக்கான சம்பள முற்பணக் கொடுப்பனவுகள் யாவும் ஆனி, ஆடி, ஆவணி மாதங்கள் வரையுமே வழங்கப்படவேண்டும் என்று வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் யாழ். கல்வித்திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆவணி மாதத்தின் பின்னரும் சம்பள முற்பணம் வழங்கப்பட வேண்டுமா என்பது பின்னர் அறிவிக்கப்படும் என்றும் அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ் கல்வித்திணைக்களத்தில் இடம் பெயர்ந்த ஆசிரியர்கள் கல்வித்திணைக்கள ஊழியர்களுக்கான ஆவணி மாத கொடுப்பனவு வேலைகள் துரித கதியில் நடைபெறுவதாகவும் இவர்களுக்கான கொடுப்பனவுகள் வருகிற புதன்கிழமைக்கு முன்னர் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ப-17கி

## வந்த பணம் பங்கிடப்பட்டது

கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட 50 லட்சம் ரூபாவில் 20 லட்சம் ரூபா யாழ். போதனா வைத்தியசாலைக்கும், 24 லட்சம் ரூபா பிராந்திய சுகாதார சேவை திணைக்களத்துக்கும், மிகுதி 6 லட்சம் ரூபா அரசாங்க அதிபர் பிரிவுக்கும் வழங்கப்பட்டது. ப.11.68 ரூ

## கடமைக்கு திரும்பப்பணிப்பு

கிளிநொச்சிப் பிரதேசசபையின் ஊழியர்கள் கடமைக்கு வராததால் கடமைகள் ஸ்தம்பிதமடைவதால். இச் சபையின் ஊழியர்கள் அனைவரையும் இம் மாதம் 25-ம் திகதிக்கு முன கடமைக்குத் திரும்புமாறும், வரத்தவறும் பட்சத்தில் அந்த அந்தப் பதவிகளுக்கு புதிய ஆட்களை நியமிக்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. 35கி

# நவராத்திரிச் சிந்தனை-4

## அருள் வேண்டும் தாயே!

அம்பிகையை வழிபட்டு அவளிடம் இகபர சௌபாக்கியங்களை வேண்டிப் பெறுவதற்குரிய காலம் நவராத்திரி.

எம் பெருமாட்டியின் அருளானந்தக் கடலில் மூழ்கித் திளைத்தவர் அபிராமிப்பட்டர்.

இம்மைக்கும் மறுமைக்கும் உரிய பேறுகளை, பட்டர்பிரான் அன்னை அபிராமியிடம் வேண்டுகிறார்;

''தாயே! மெய்ப்பொருளை நாடும் கல்வி, ஆயுள் விருத்தி, வஞ்சகமற்ற நண்பர்கள், செல்வச்செழிப்பு, மாறா இளமை, நோயில்லாத உடல், எதற்கும் கலங்காத - சோர்வடையாத - மனம், அன்புபூண்ட மனைவி (அல்லது கணவன்), நன் மக்கள், குறைவற்ற புகழ், நாணயம், இடையூறில்லாத கொடை, குறையாத பொருள், செங்கோல் வழுவாத ஆட்சி, துன்பமில்லாத வாழ்வு, உன்பாதத்தில் அன்பு, உன் தொண்டருடைய கூட்டுறவு - சகவாசம் - இத்தனையும் அருள வேண்டும் அம்மா!''

தனிமனித முன்னேற்றத்துக்குரிய கல்வி, செல்வம், உடல்நலம், திடசித்தம், நாணயம் முதலியவற்றையும்—

இல் வாழ்வுக்குரிய தாரம், மக்கட்பேறு, செல்வச் செழிப்பு, கொடை முதலியன வற்றையும் —

பொதுவாழ்வுக்குரிய நட்பு,புகழ், நீதியான அரசாட்சி ஆகியவற்றையும் —

ஆன்ம ஈடேற்றத்துக்குரிய பக்தி, நல்லடியார் இணக்கம் ஆகியவற்றையும் - பட்டர்பிரான் கோருவது கவனத்துக்குரியது.

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியி லாத உடலும்
சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள்வா ராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே!
ஆதிகடவூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

## நாளை செல்லும்

திருகோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக முல்லைத்தீவில் உள்ளவர்களுக்கு எட்டுக் கிழமைகளில் ஆயிரத்தறுநூறு தற்காலிக பலசல வசதிகளுடன் கூடிய சிறு குடிசைகளை அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கையினை மேற்கொள்வதற்கென மானிப்பாயில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கப் பிரிவு நாளை முல்லைத்தீவு செல்கிறது. (ப - 11 து)

### எந்த...

மிகவும் பலமாக மோத வேண்டிய நிலையிலுள்ளோம்.' இராணுவத்தின் எந்தஅணிக்கும்யாழ்ப்பாணம் வர விருப்பமில்லை, இதனால் கஜபாகு றெஜிமென்ரில் இருக்கும் நாங்கள் இன்னும் அதிக காலம் இருக்க வேண்டிவரும்

'இந்த சண்டை பல மாத காலம் நீடிக்கும். உடனடியாக முடியக்கூடிய சாத்தியம் இல்லை. நான் யுத்தத்தில் தப்பி மீண்டும் வீடு வருவேன் என்ற நம்பிக்கை எனக்கில்லை இதுஒருவேளைஎனதுகடைசிக் கடிதமாகவும் இருக்கலாம். பல இரவுகள் நித்திரையில்லை. இதனால் என்னுடைய எழுத்தும் கிறுக்கலாக இருப்பதை நீங்கள் புரிந்து கொள்ளுவீர்கள்.'

'என்னுடைய வங்கிக் கணக்கு இலக்கத்தை அனுப்புகின்றேன். எனக்கு ஏதும் நடந்தால் அதிலிருந்து பணத்தைப் பெற்று வீட்டிலிருக்கும் எல்லோருக்கும் கொடுக்கவும். எனது சம்பளத்தை அப்பாவின் பெயருக்கு மாற்றவும். இராணுவ இரகஸியங்களை வெளியே சொல்லக்கூடாது. இக்கடிதம் எழுதியது பற்றி எவருக்குமே வாய் திறக்க வேண்டாம்.''

என இந்த நான்கு பக்க கடிதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. கி

### கப்பல்...

மேலதிகமாக 17 மூடைகளை ஏற்றிச்சென்று அவற்றைத் தனியார் கடைகளில் விற்பனை செய்தனராம்.

வடமராட்சி கிழக்கு பல நோ. கூ. சங்க கொள்வனவு உத்தியோகத்தர், லொறிச் சாரதி, கிளீனர், கிளை முகாமையாளர் ஆகியோரே இதில் சம்பந்தப்பட்டவர்களாவர்.

கப்பலில் இறக்கப்படும் பொருட்கள் கடலில் வீழ்ந்ததாகக் கூறியும் மோசடி நடைபெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (43 ரூ)

### கர்ப்பிணி—

னர்.

அகதி முகாம் பொறுப்பாளர்கள் அருகில் உள்ள குடும்பநல சேவையாளருடன் தொடர்பு கொண்டு அகதி முகாமின் பெயர், உதவி அரசாங்க அதிபர் பிரிவு,குழந்தைகள், தாய்மார், பிள்ளைகள் போன்றவற்றின் விபரங்களை குறித்து தனித்தனிப் பிரதிகளாகக் கொண்டுவரும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

இதன் மூலம் தற்போதுள்ள கலோரிக் குறைபாட்டையும், போசாக்கின்மையினையும் நீக்கலாமென வைத்தியர்கள் கூறுகின்றனர்.(ப-11 து)

### மண்எண்ணையில்...

வாங்கிய மண்எண்ணையை நீர் இறைக்கும் யந்திரத்திற்கு விட்டு இயக்கியபோது அது இயங்கவில்லைபரிசோதித்துப் பார்த்தபோது அதில் தண்ணீர் கலக்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இக் கலப்பட விடயம் குறித்து விடுதலைப்புலிகளிடம் புகார் தெரிவித்தபோது அவர்கள் பிரஸ்தாப மண் எண்ணை வியாபாரியை எச்சரிக்கை செய்தனர் (13ரூ

### வவுனியாவில்...

நகர்ப்பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டுவரும் தமிழ் வியாபாரிகளை இராணுவத்தினர் சிங்களத்தில் ஏசி அவமானப்படுத்துவதுடன் பகல் சில மணி நேரம் இவர்களது வியாபாரம் தடுக்கப்படுகிறதாம். ப·6ஸ்ரீ

### அகதி...

வுப்பிரிவு பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது,

இவ்வாறு வேறு இடங்களில் அனுமதிப்பத்திரம் பெற்றது கண்டுபிடிக்கப்பட்டால் எந்த விதமான உணவுப் பங்கீடும் கிடைக்கமாட்டாது. எனவும் முகாமில் தங்கியிருப்பதற்கான தகுதியையும் இழக்க வேண்டி ஏற்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வேறு இடங்களில் உணவுப் பொருள் பெற்றிருந்தால் தங்கியுள்ள முகாம் பொறுப்பாளருக்கு அறிவிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ

### திலீபன்...

உண்ணாவிரதம் நேற்று இடம்பெற்றது. மாதகலில் கடந்த புதன் இடம்பெற்ற நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் திரு. ஆஞ்சநேயர் உட்பட பலர் உரையாற்றினார்கள். (13,27,33,ப-10ரூ)

### வவுனியாவில் ராணு...

மோதலை தொடர்ந்து ராணுவம் முகாம் திரும்பியது.

இதே தினம் பாவற்குளம் முதலாம் யூனிற் பகுதியில் புலிகளின் முகாம் ஒன்றை சுற்றி வளைக்க முயன்ற ராணுவம்மீது புலிகள் மேற்கொண்ட தாக்குதலினால் ராணுவம் திரும்பிச் சென்றது. து

### இடம்பெயர்ந்த...

கட்டமாக இடம்பெயர்ந்தவர்கள், தொடர்ந்து உணவு முத்திரையைவைத்திருப்பவர்கள், அடுத்து தொழில் இன்றியும், வருமானம் இழந்துள்ளோர் என்ற வரிசையில் உணவுப் பொருட்களை விநியோகம் செய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுக் கடைகளில் அதிகளவு மக்கள் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதுடன், தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் மக்களைப் பாதுகாக்கவும் முடியும் என்று தெரிவித்த அரச அதிபர் இந்த உணவுப் பங்கீடு யாழ். மாவட்டத்தில் உள்ள சகல மக்களுக்கும் கிடைக்க தான் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்தார். 66-து

### பெண் புலிகள்...

தமிழர்களுக்குப் புலிகள் மீதுள்ள ஆதரவையே காட்டுகிறது என குறிப்பிட்டுள்ளார்

பெண் புலிகள் காடுகளில் தனி முகாம்களை அமைத்து தாக்குதல் திட்டத்தை தாமே வகுக்கின்றனர் எனக்கூறும் இன்டிபென்டன்ட் தினசரி, பெண்கள் தனியே குடும்பப் பாங்காக இருக்காது தம்மின உரிமைகளைப்பெறவும் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்பதே அப்பெண்களின் கருத்தாகும் எனக்கூறுகிறது. து

### கிழக்கு...

ஊர்காவற்படையினாலும் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 17 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்தில் உள்ள சொறிக்கல் முனை என்ற இடத்தில் 35 தமிழர் சவளக்கடை முகாமில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ் முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்பட்டு சிங்கள குடியேற்றமாக்கப்பட்டு வருகின்றன.

இன்று தமிழர்கள் மீதான இனப்படுகொலை நாளை முஸ்லிம் மக்கள் மீதும் திருப்பப்படும்.

தனது சொந்த இன மக்களையே ஆயிரக்கணக்கில் இரவிரவாக வீதிகளில் சுட்டு எரித்த சம்பவங்களை எவரும் மறந்து விடமுடியாது இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரூ

### மாதகல்...

இரு படகுகள் கரையில் இருந்து அரைமைல் தூரம் கடலில் நின்றதனால் அவர்களுக்கருகில் வந்த கடற்படைப்படகு ஒரு படகில் நின்ற இருமீனவரையும் தாக்கிப்பின் இருவரையும் தமது படகில் ஏற்றினர்.

இவர்கள் ஜெமிஸ் அன்ரனிதாஸ் (23) திரவியதாஸ் (22) ஆவர். மற்றைய படகில் இருந்த இருவரைக் கடற்படையினர் பொல்லுகளால் தாக்கியதில் ஒருவரது கை முறிந்தது. மற்றையவர் காயமடைந்தார் பின்னர் இருவரும் விடுவிக்கப்பட்டனர்.

இதன் பின்னர் கரையோரமாக நின்று மீன்பிடித்த படகுகளுக்குத் துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட போது படகில் இருந்தவர்கள் கடலில் குதித்துக் கரையை வந்தடைந்தனர். 68-ப-11-து

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' கில் உள்ள அச்சகத்தில் 22-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.